சென்னை கிண்டியில், நேற்று (08.08.2024) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) மற்றும் விற்பனைக்குழுச் செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் / அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் கோ.பிரகாஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாவட்ட வேளாண்மை (வேளாண் வணிகம்)

துணை இயக்குநர்கள்-விற்பனைக்குழுச் செயலாளர்களுடன் ஆய்வுக் கூட்டம்

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக.9- வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் நேற்று (08.08.2024) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் செயல்பாடுகளை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) மற்றும் விற்பனைக்குழு செயலாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இக்கூட்டத்திற்கு வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளர், வேளாண்மை - உழவர் நலத் துறை செல்வி. அபூர்வா, முன்னிலை வகித்தார்கள்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் தனது உரையில், விளைபொருட்களை சேமித்து வைத்து உயர்ந்த விலை கிடைக்கப்பெறும் காலங்களில் விற்பனை செய்திட ஏதுவாக மாநிலம் முழுவதும் 284 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் 525 சேமிப்புக்கிடங்குகள் உள்ளன. இவற்றின் மூலம் 4 இலட்சம் மெட்ரிக் டன் விளைபொருட்களை சேமித்து வைக்கலாம். நடப்பாண்டில் இதுவரை ரூ.3,225 கோடி மதிப்புள்ள 9.63 இலட்சம் மெட்ரிக் டன் வேளாண் விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. பொருளீட்டுக்கடனாக விவசாயிகளுக்கு ரூ. 22.13 கோடியும், வணிகர்களுக்கு ரூ.1.68 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. சந்தை செயல்பாட்டில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தும் வகையில் 157 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் மின்னணு தேசிய வேளாண் சந்தைத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 56 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்தப்படவுள்ளது.

விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டம்!

விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வசதிகளை முழுமையாக பயன்படுத்தி நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்வதற்கு தேவையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும், விவசாயிகளுடன் அலுவலர்கள் நல்ல தொடர்பில் இருந்திடவும், விவசாயிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளை செய்திடவும், விவசாயிகள் மற்றும் வணிகர்களுக்கு பொருளீட்டுக் கடன் அதிகமாக வழங்கிடவும், மின்னணு வேளாண் சந்தை மூலம் பரிவர்த்தனை மேற்கொள்ளவும் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள். அனைத்து விற்பனைக் கூடங்களும், கழிவறைகளும் சுத்தமாகவும் தூய்மையாகவும் சிறந்த முறையில் பராமரித்திட துரித நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்கள்.

மேலும், அனைத்து வணிக நிறுவனங்களையும் முறையாக அழைத்து பேசி விளைபொருட்களை வேளாண்மை விற்பனைக் குழு மூலம் கொள்முதல் செய்திட நடவடிக்கை எடுத்திடவும், ஒவ்வொரு கிராமசபை கூட்டம் மற்றும் விவசாயிகள் குறைத் தீர்க்கும் கூட்டத்தில் இத்துறையின் செயல்பாடுகளை விளக்கிடவும், மின்னணு வேளாண் சந்தை மூலம் பரிவர்த்தனை செய்யும் விவசாயிகள் மற்றும் வணிகர்களின் எண்ணிக்கையினை அதிகப்படுத்திடவும் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

சிறு மற்றும் குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்கள் கூட்டாக பயிர் சாகுபடி திட்டம் தயாரித்து அதற்கு தேவையான இடுப்பொருட்களை மலிவு விலையில் பெற்று உற்பத்தி செய்யும் விளைப்பொருட்களை ஒருங்கிணைத்து நல்ல விலைக்கு விற்பனை செய்திடவும் மேலும் அதிக வருமானம் பெறுவதற்கு விளைப்பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதற்கும், 397 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் விதமாக ஆதார நிறு வனங்கள் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக திட்டம் தயாரித்து அவர்கள் விளைப்பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதற்கும், உள்ளூர், மாநில, தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளில் விற்பனை செய்வதற்கும் வழிவகை செய்ய வேண்டும் என அறிவுறுத்தினார்கள். உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளை திறமையான நிறுவனமாக உருவாக்கிட திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கிடவும் அறிவுரை வழங்கினார்கள்.

கிராமப்புறங்களில் தேவைப்படும் சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள், சிப்பம் கட்டும் வசதிகள், தரம் பிரிப்பு வசதிகள் போன்றவற்றை வேளாண் கட்டமைப்பு நிதி (Agri Infrastructure Fund) மூலம் தனியார் நிறு வனங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் உருவாக்கிடும் பொருட்டு வங்கிகளில் பெறப்படும் ரூ.2 கோடி வரையிலான கடன் மீது 7 ஆண்டுகளுக்கு 3 சதவீத வட்டி மானியம் வழங்கப்படுகின்றது. இதுவரை, 6,854 நபர்களுக்கு ரூ.1,950 கோடி கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

192 உழவர் சந்தைகள்!

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களான காய், கனிகளை இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்யும் வகையில் தற்போது தமிழ்நாட்டில் 192 உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. உழவர் சந்தைகளில் வரத்தினை அதிகரித்திட தோட்டக்கலைத் துறையும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக துறையும் இணைந்துதேவையான நடவடிக்கைகளை எடுத்திட அறிவுறுத்தினார்கள்.

275 குளிர் சாதன கிடங்குகள்!

அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை குறைக்கவும், விவசாயிகளை பெரும் சந்தைகள், பதப்படுத்துவோர் மற்றும் நுகர்வோர்களுடன் ஒருங்கிணைக்கவும், காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற அழுகும் பொருட் களுக்கான விநியோக தொடர் மேலாண்மை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திடவும், 275 குளிர்பதன கிடங்குகளை விவசாயிகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சீரிய முறையில் பயன்படுத்திடவும் அறிவுறுத்தினார்கள்.

இவ்வாய்வு கூட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் மாவட்ட வேளாண் துணை இயக்குநர்கள் மற்றும் விற்பனைக் குழு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் கோ.பிரகாஷ், நன்றியுரை வழங்கினார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (08.08.2024) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசு பண்ணை, திடீர் நகர், அப்துல் ரசாக் தெரு, சாமியார் தோட்டம், செட்டி தோட்டம், நாகிரட்டி தோட்டம், அண்ணா கார்டன், நேரு நகர், கன்னிகாபுரம், களிக்குன்றம் மற்றும் கோட்டூர்புரம் எல்லையம்மன் கோவில் ஆகிய பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு பட்டா வழங்குதல் தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, துணை மேயர் மு. மகேஷ் குமார், கோடம்பாக்கம் மண்டலக் குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, அடையாறு மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணைத் தலைவர் பொறுப்புக்கான இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஏ.வி.எம்.இளங்கோவன் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ.வி.எம்.இளங்கோவனுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். அருகில் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் எம்.டி.லோகநாதன், தெற்கு ஒன்றியச் செயலாளர் ப.சந்தானம், காட்டாங்குளத்தூர் ஒன்றிய குழுத்தலைவர் உதயா கருணாகரன் ஆகியோர் உள்ளனர்.

“சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு (2 ஆம் கட்டம்)

இதுவரை ஒரு நிதியும் வழங்கவில்லை!” என ஒன்றிய அரசு ஒப்புதல்!

மக்களவையில் தயாநிதி மாறன் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 9 - சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான ஒப்புதல், வழங்கவேண்டிய நிதி, கடந்த ஐந்தாண்டுகளில், மாநிலம் மற்றும் ஆண்டு வாரியாக மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்புதல்களின் விவரங்கள் மற்றும் பிற மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன என ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகத்திடம் மக்களவையில் எழுத்துப்பூர்வமான பதில்களுக்காக கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் பின்வருமாறு :

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கென விநியோகிக்க ஒப்புதல் அளித்த நிதியின் தற்போதைய நிலை என்ன என கேள்வி எழுப்பினார்.

கடந்த மூன்று ஆண்டுகளாக இத்திட்டத்திற்கான நிதியை வழங்க அனுமதிப்பதிலும், நிலுவையில் உள்ள தொகையினை விடுவிப்பதிலும் ஏற்படுகின்ற தாமதத்திற்கான காரணங்கள் என்ன என்றும் மேலும் அவற்றை சரிசெய்து அதன் செயல்முறைகளை விரைவுபடுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன எனவும் கேள்வி எழுப்பினார்.

மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கான (Phase II) நிதி வேண்டி தமிழ்நாடு அரசு எழுத்துப்பூர்வமாக அனுப்பிய கடிதங்களுக்கு ஒன்றிய அரசு அளித்த பதில்கள் என்ன என்றும் மேலும் அத்திட்டத்திற்கு உடனடியாக நிதி வழங்காமல் காலம் தாழ்த்துவதற்கான காரணம் என்ன எனவும் கேள்வி எழுப்பினார்.

கடந்த ஐந்தாண்டுகளில், மெட்ரோ இரயில் திட்டங்களுக்கு என அனுமதி அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதை மாவட்டம், மாநிலம் மற்றும் ஆண்டுவாரியாக பட்டியலிட்டு தெரியப்படுத்தவும் என கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் டோகன் சாஹூ அவர்கள் அளித்த பதிலில் சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்டத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு முன்மொழியப்பட்டுள்ள 118.9 கி.மீ கொண்ட வழித்தடத்திற்காக கணக்கிடப்பட்ட திட்ட மதிப்பு ரூ.63,246 கோடி. இது போன்ற அதிக மதிப்பீடு கொண்ட திட்டங்களுக்கு அத்திட்டத்தின் சாத்தியக்கூறுகள் மற்றும் நிதி இருப்பின் தன்மையைப் பொறுத்தே ஒப்புதல் வழங்கப்படும். மேலும் தற்போது சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்டத் திட்டமானது மாநில அரசின் திட்டமாக செயல்பட்டு வருகிறது, எனவே அத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான செலவினத்தை தமிழ்நாடு அரசே தற்போது செலவழித்து வருகிறது என்று தெரிவித்தார்.

இவ்வாறு மேற்கூறப்பட்டுள்ள ஒன்றிய அரசின் பதில் மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது. கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முந்தைய பட்ஜெட்டில் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு ரூ.63000 கோடி ஒதுக்கீடு செய்ததாக அறிவித்தார். அவ்வாறு அறிவித்துவிட்டு இன்றுவரை அத்திட்டத்திற்கென ஒரு ரூபாய்கூட விடுவிக்காமல் இழுத்தடிப்பதன் மூலம் தமிழ்நாட்டு மக்களை ஒன்றிய அரசு வஞ்சிக்கிறது.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். சர்வீஸ் என்று இருப்பது போல் மருத்துவத் துறைக்கும்

இந்தியன் மெடிக்கல் சர்வீசை உருவாக்க வேண்டும்!

மக்களவையில் – டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக.9 “ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். சர்வீஸ் என்று இருப்பதுபோல் மருத்துவத்துறைக்கும் இந்தியன் மெடிக்கல் சர்வீஸ் என்று ஒரு பிரிவை உருவாக்க வேண்டும்” என்று நாடாளுமன்ற மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மக்களவையில் பேசியதாவது:-

நமது நாட்டில் ஒன்றிய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ்., ஐ.ஆர்.எஸ்.ஐ., இரயில்வே சர்வீஸ் என இருபதுக்கும் மேற்பட்ட துறைகளுக்கு அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதுபோல மக்களுக்கு மிக முக்கிய துறையாக உள்ள மருத்துவத்துறைக்கு என்று இந்தியன் மெடிக்கல் சர்வீஸ் என்று ஒரு பிரிவை உருவாக்கி எம்.பி.பி.எஸ், பி.டி.எஸ். போன்ற மருத்துவக் கல்வி பயின்றவர்களைத் தேர்ந்தெடுத்து மருத்துவத்துறை அதிகாரிகளாக நியமனம் செய்ய வேண்டுமென்று பல ஆண்டுகளாக மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்கள் கோரி வருகின்றனர்.

மருத்துவம் தவிர்த்து வேறு கல்வி பயின்ற அதிகாரிகளை மருத்துவத்துறை அதிகாரிகளாக நியமிக்கும் போது அவர்களுக்கு மருத்துவம் சம்பந்தப்பட்ட விவரங்கள் குறித்த புரிதல் இல்லை. எனவே அவர்கள் மேற்கத்திய நாடுகள் பின்பற்றுகின்ற மருத்துவ அளவீடுகளையே உதாரணத்திற்கு சர்க்கரை வியாதி முதலானவற்றுக்கே மேற்கத்திய நாடுகளின் அளவீடுகளையே பின்பற்றுகின்றனர்.

குளிர் தேசங்களான மேற்கத்திய நாடுகள் வைட்டமின் டி குறித்து வைத்துள்ள அளவீடுகளையே வெப்ப நாடான நம் நாட்டிற்கும் பின்பற்றுகின்றனர். மருத்துவத்துறைக்கு சேதவிகிதம் நிதி பட்ஜெட்டில் ஒதுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்ட போதிலும் கூட இத்துறைக்கு பட்ஜெட்டில் 2 சதவீத அளவிற்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

இது போன்ற பிரச்சினைகளை புரிந்துகொள்ள வேண்டிய நிலையில் அதிகாரிகள் இருந்தால்தான் இக்குறைகள் நிவர்த்தி செய்யப்படும். எனவே, இந்திய மருத்துவத்துறை என்று ஒரு பிரிவை உருவாக்கி மருத்துவக் கல்வி பயின்றவர்களைத் தேர்ந்தெடுத்து மருத்துவத்துறைக்கு அதிகாரிகளாக நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. பேசினார்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேற்று (8.8.2024) சென்னை, அண்ணா நகரில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் அமுதம் பல்பொருள் அங்காடியினை நவீனமயமாக்கும் பணிகளை நேரிநேரில் ஆய்வு செய்து, மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்திடவும், மாற்றுத்திறனாளிகள் வசதிக்கென சாய்வுத்தள பாதை அமைத்திடவும், தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை, பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் உடனிருந்தனர்.